# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.103/2025

**Deposition of Witness for Prosecution PW 12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Dr. நவீன் | Father's Name | : | நாகராஜன் |
| Village | : | திருவாரூர் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | மருத்துவர் | Age | : | 37 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 16th day of December 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் முதுநிலை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.11.2024 அன்று பணியிலிருந்தபோது பேரளம் காவல் நிலைய கு.எண்.656/2024 வழக்கில் சம்மந்தப்பட்ட 45 வயது மதிக்கத்தக்க தேவி என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்ய பேரளம் காவல் ஆய்வாளர் அவர்கள் காவலர் 806 திரு மகேஷ்குமார் என்பவர் பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடித்தை கொடுத்தார். அதனை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.16 14:56:24 +0530

பெற்றுக்கொண்டு நான் பிரேத பரிசோதனை செய்தேன். நல்ல உடல் வாகு கொண்ட பெண்ணின் பிரேதமானது மல்லாந்த நிலையில் காணப்பட்டது. பிண விரைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது. இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு 1) 4x2 செ.மீ x கழுத்து குழி ஆழத்திற்கு சாய்ந்த நிலையில் சிவப்பு நிற குத்துக்காயம், கீழ் மூன்றாம் பகுதி நடுப்புறமாக காணப்பட்டது. அக்காயத்திற்கு தடம் பின்பக்கம் மற்றும் கீழ்பகுதியை நோக்கி காயத்தின் அடிப்பகுதியில் உள்ள மென் திசுக்கள், சதைகள், ரத்த குழாய்கள், நரம்புகள், சுவாச குழாய் குத்தி கிழிந்து காணப்பட்டது. 2)3x2 cm x நெஞ்சுகுழி ஆழத்திற்கு சாய்ந்த நிலையில் சிவப்பு நிற குத்துக்காயம், இடது புற மார்பின் மைய மூன்றாம் பகுதி வெளிப்புறமாக காணப்பட்டது. அக்காயத்தின் தடம் பின்பக்கம் மற்றும் கீழ்பகுதியை நோக்கி, அக்காயத்தின் கீழ் உள்ள மென்திசுக்கள், சதைகள், நுரையீரல் உறை மற்றும் இடது புற நுரையீரலில் உள்ள மேல் பகுதியில் 1x 0.5x0.3 செ.மீ, 1x0.5x0.2 செ.மீ கிழிந்து காணப்பட்டது. இடது புற 4 மற்றும் 5 மார்பெலும்பு உடைந்தும் அதை சுற்றியுள்ள மென்திசுக்கள் சிவப்பு நிற ரத்தம் சூழ்ந்து காணப்பட்டது. நெஞ்சு குழியில் சுமார் 2 லிட்டர் ரத்தம் உடைந்து மற்றும் தண்ணியாக காணப்பட்டது. 3) 3x2cmx வயிற்று குழி ஆழத்திற்கு சாய்ந்த நிலையில் சிவப்பு நிற குத்துக்காயம், வலது புற வயிற்றின் தொப்புல் கொடியின் 3

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.16 14:56:31 +0530

செ.மீ.க்கு கீழ் காணப்பட்டது. அக்காயத்தின் தடம் பின்பக்கம் மற்றும் கீழ்பகுதியை நோக்கி, அக்காயத்தின் கீழ் உள்ள மென்திசுக்கள், சதைகள், நடு சிறுகுடாலை கிழித்து முன் சிறுகுடலிருந்து 30 செமீ கீழ் காணப்பட்டது. அதை சுற்றியுள்ள மென்திசுக்கள் சிவப்பு நிற ரத்தம் சூழ்ந்து காணப்பட்டது. வயிற்று குழியில் சுமார் 2.5 லிட்டர் ரத்தம் உடைந்து மற்றும் தண்ணியாக காணப்பட்டது. 4) 2x1 cm x சதை ஆழத்திற்கு சாய்ந்த நிலையில் சிவப்பு நிற குத்துக்காயம், வயிற்றின் நடுபகுதியில் தொப்புல் கொடியின் 5 செமீ கீழ் காணப்பட்டது. 5) 1x0.5 cm x சதை ஆழத்திற்கு இடது புற அக்குள் பகுதி, 5x2 cm x சதை ஆழத்திற்கு முன்பக்க வலது புற தோள் பட்டையில் சாய்ந்த நிலையில் சிவப்பு நிற குத்துக்காயம், 6) 14x4-5 cm x சதை ஆழத்திற்கு இடது புற கை முட்டியில், 2x1 cm x சதை ஆழத்திற்கு தாடையிலும், 1x0.5x0.5 cm இடது புற மோதிரவிரலிலும் சாய்ந்த நிலையில் சிவப்பு நிற வெட்டுகாயம் காணப்பட்டது. 7)2x1 cmx சதை ஆழத்திற்கு இடது புற கன்னத்தில் சிவப்பு நிற கன்றிய காயம் காணப்பட்டது. தலைப்குதியை சூராய்வு செய்து பாரத்ததில் தலைதோள், மண்டை எலும்புகள், மூளைத்திரை, மூளை நல்ல நிலையில் காணப்பட்டது. நாவடி எலும்பு, இருதயம், வலதுபுற நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், இரு புற சிறுநீரகம், இடுப்பு எலும்பு, முதுகெலும்புகள் நல்ல நிலையில் காணப்பட்டது. இரைப்பையில் 50

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.16 14:56:37 +0530

கிராம் பாதி செரித்த உணவு எந்தவிதமான வாசனையும் இன்றி காணப்பட்டது. பெருங்குடல் காற்று அடைத்து காணப்பட்டது. சிறுநீர் பை காலியாக காணப்பட்டது. பெண்ணுறுப்பு நல்ல நிலையில் காணப்பட்டது. கர்ப்பபை நல்ல நிலையில் காணப்பட்டது. அதன் வெட்டு தோற்றத்தில் காலியாக காணப்பட்டது. உள்ளுறுப்புகள் அனைத்தும் வெட்டு தோற்றத்தில் வெளிர் நிறத்தில் காணப்பட்டது. உள்ளுறுப்புகளை சேகரித்து தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த அறிக்கையில் அவர் ஆல்ஹாஹாலோ, விஷமோ உட்கொள்ளவில்லை என்று கண்டறியப்பட்டது. அந்த Toxicology அறிக்கை **அ.சா.ஆ.6**. துணி மாதிரியை சேகரித்து அதன் இரத்த வகையை அறிய தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்கூரிய நபர் பலதரப்பட்ட காயத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் இரத்தக் கசிவால் இறந்துள்ளார் என்று கருத்து கூறி சான்று வழங்கினேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.7**. கத்தி போன்ற கூர்மையான ஆயுதத்தால் குத்தப்பட்டால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.16 14:56:43 +0530

**குறுக்கு விசாரணை**

தற்சமயம் இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.16 14:56:49 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.103/2025**

**Deposition of Witness for Prosecution PW 13**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுரேஷ் | Father's Name | : | நாகராஜன் |
| Village | : | குடவாசல் | Taluk | : | குடவாசல் |
| Calling | : | | Age | : | 38 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 16th day of December 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.09.2024 அன்று பேரளம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது மயிலாடுதுறை அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையிலிருந்த ராமமூர்த்தி மனைவி தேவி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து பேரளம் காவல் நிலைய மனு எண் 432/2024 ன்படி பதிவு செய்து

பின்னர் 01.10.2024 அன்று எதிரி பக்கிரிராஜா மீது பேரளம் காவல் நிலைய கு.எண் 535/2024, பாநிச பிரிவுகள் 296(பி), 74, 118(1), 351 ன்படி வழக்கு பதிவு செய்து அசல் முதல் தகவலறிக்கையை சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். Xerox Copy **அ.சா.ஆ.8** (அ.சா.ஆ.8 யை குறியீடு செய்வதற்கு எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. AIR 2001 SC 1158 தீர்ப்புரையை பின்பற்றியும் நீதியின் நலன் கருதியும் குறியீடு செய்யப்படுகிறது). ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.103/2025**

**Deposition of Witness for Prosecution PW 14**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மகேஷ்குமார் | Father's Name | : | ராஜேந்திரன் |
| Village | : | பேரளம் | Taluk | : | நன்னிலம் |
| Calling | : | | Age | : | 34 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 16th day of December 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போதும் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் பேரளம் காவல் நிலையத்தில் 2ம் நிலை காவலராக நிலைய பொறுப்பிலிருந்தபோது 11.11.2014 அன்று 18.00 மணிக்கு பேரளம் காவல் நிலைய கு.எண் 656/2024 வழக்கில் இறந்துபோன தேவி என்பவரது பிரேதத்தை திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்தபோது உடனிருந்தேன். பிரேதப் பரிசோதனை முடிந்து பிரேதத்தை அவரது உறவினர் வசம்

ஒப்படைத்தேன். பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட இரத்தம் படிந்த குங்குமம் கலர் புடவை ஒன்று, இரத்தம் படிந்த குங்குமம் கலர் துப்பட்டா ஒன்று, இரத்தம் படிந்த ஆரஞ்ச் கலர் பாவாடை ஒன்று, இரத்தம் படிந்த கருநீல கலர் ஜாக்கெட் ஒன்று ஆகியவற்றை பெற்று நிலையம் வந்து தனி அறிக்கை மூலம் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். அந்த தனி அறிக்கை **அ.சா.ஆ.9**. மேற்படி அயிட்டங்கள் முறையே **சா.பொ.5 முதல் சா.பொ.8**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

தற்சமயம் இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.